# மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு விருது

■ சென்னை

பயணிகளுக்கு சிறந்த இணைப்பு போக்குவரத்து வசதியை ஏற்படுத்தியதற்காக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு சிறந்த பெருநகர் போக்குவரத்து விருது வழங்கப்பட்டுள்ளது.

சென்னையில் முதல்கட்டமாக மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் முடிவடைந்து 45 கிமீ தூரத்துக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப் பட்டு வருகின்றன. அடுத்தகட்ட பணிகள் நடந்து வருகின்றன. பயணிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து, தற்போது தினமும் சராசரியாக 1.20 லட்சம் பேர் பயணம் செய்து வருகின்றனர்.

மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் சார்பில் லக்னோவில் நடைபெற்ற மாநாட்டில் சிறந்த பெருநகர் போக்குவரத்து விருதை உத்தர பிரதேசத்தின் துணை முதல்வர் டாக்டர் தினேஷ்சர்மா சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பங்கஜ்குமார் பன்சாலிடம் வழங்கினார்.

போக்குவரத்து இணைப்பு வசதிகள் மேம்படுத்துதல், நடைமேம்பாலங்கள், நகரும் படிகள் உள்ளிட்டவை அமைத்து பயணிகளுக்கு சிறந்த வசதியை ஏற்படுத்தியவதற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.